RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1311

OPEN ACCESS

# தமிழர் நில அடிப்படையிலான திணைக் கோட்பாடும் பொருளாதார மாற்றமும்

ச. அருள் ஜோஸ்பின் [அ, *]

[அ] தமிழ்த்துறை, தூய மரியன்னை கல்லூரி (தன்னாட்சி), தூத்துக்குடி, தமிழ்நாடு- 628001, இந்தியா

# Tamils Land-based Thinai Theory and Economic Transformation

S. Arul Josephine [a, *]

[a] Department of Tamil, St. Mary's College (Autonomous), Thoothukudi -628001, Tamil Nadu, India

* Corresponding Author: josevin06@gmail.com

Received: 26-05-2022
Revised: 19-08-2022
Accepted: 23-09-2022
Published: 19-11-2022

Check for updates

## ABSTRACT

Literary theory is a tool for the systematic study of the nature of literature and the ethics of analyzing literature. The Tolkappiam theory of Thinai has been identified by scholars and presented as a worldwide literary theory. It is worth considering here how our forefathers thought and constructed the natural environment, the emotions of the human mind, and time. Although the environment and topography mentioned by Tolkappiyar have changed, the basic feelings of man are always applicable everywhere. One of the theories of Tolkappiam, the Theory of the Thinai, is an excellent approach to study. As far as Tolkappiyam is concerned, the formation of the thinai theory is a tool to bring the subjective life records of group society into the order of grammatical rules. The term "thinai" can be taken to refer to the characteristic interests based on the land. Subject matters can be considered as determining factors in the character of the land. The Thinai distinctions and delimitations show that the Sangam society has become a society that has begun to live forever in one place. There is no doubt that the Sangam age was the period when the ethnic society in which the system of collective life prevailed was followed by feudalism. Thinai's life is based on the respective geographies. The lives of four lands, such as Kurinji, also existed at the same time. They have attained levels of development appropriate to their respective economic bases. The purpose of this article is to study this based on the theory of the Four Thinai lands.

**Keywords:** Thinai, Tolkappiyam, Four Thinai lands, Economic Transformation.

## முன்னுரை

தமிழர் வாழ்விடமானது குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என நான்கு வகையான நிலப்பகுதிகளை அடிப்படையாகக் கொண்டது. இந்த நால்வகைத் நிலத்தின் அடிப்படையிலேயே மக்களின் வாழ்வியலும் தொழிலும் பொருளாதாரமும் அமைந்தன. தமிழுக்கே உரிய முதன்மையான இலக்கியக் கோட்பாடான திணை இலக்கியக் கோட்பாட்டின் வழி சங்க இலக்கியக் கூறுகள் காணப்பட இருக்கின்றன. சங்ககாலம் உணவு தேடும் வாழ்க்கை முறைகள் மாறி உணவு உற்பத்தியில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்ட காலம். இதனால் உருவான நிலைத்த குடியிருப்புகளை, வாழ்வியல் நெறிகளைச் சங்கத் திணை சமுதாய வாழ்வு முறைகள் காட்டுகின்றன. நான்கு வகையான திணைச் சமுதாயங்களிலும் நான்கு வேறு வகையான வாழ்க்கை முறைகள் நிலவியுள்ளன. அவைத் தனித்தனிப் பொருளாதார அச்சை மையமாகக் கொண்டு செயல்பட்டுள்ளன. இந்த நானிலத்தின் திணை சார்ந்த வாழ்வியல் கூறுகளை ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## திணை கோட்பாடு

தமிழ் இலக்கியக் கோட்பாடாக நாம் உருவாக்கும் இக்கோட்பாட்டினுள் வரும் திணை என்னும் திறனாய்வுக் கூறினுள் புறத்திணையும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது என்பதுதான் சிறப்பு. அகத்திணை என்று பார்க்கும் போது ஏழுதிணை என்று கூறினும் 'அன்பொடு புணர்ந்த ஐந்திணை' என்றும் 'மக்கள் நுதலிய அகன் ஐந்திணை' என்றும் தொல்காப்பியர் சுட்டுவதிலிருந்து குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைகளே சிறப்பாகப் பேசப்பட்டன என்றும் கொள்ளலாம். 'ஒரு குடியிற் பிறந்த பலருள் சிலர் சிறப்புற்றும் சிலர் சிறப்பின்றியும் இருப்பின் அன்னோர் ஒரு குடிப்பிறப்பிற்கு இழுக்கில்லையாதல் போன்றே கைக்கிளையையும் பெருந்திணையையும் அகத்திணையில் அடக்குதல் இழுக்கில்லை' என்னும் கருத்து நினைக்கத்தக்கது. தொல்காப்பியர் விளக்கப்படி ஒவ்வொரு திணைக்கும் முப்பொருள்கள் உள்ளன. அவை முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் ஆகும். முதற் பொருளில் நிலமும் பொழுதும் சுட்டப் பெறும் (Subbu Reddyar, 1998). கருப்பொருள் என்பது ஒவ்வொரு நிலத்திலும் உள்ள கடவுள், மனிதர்கள், விலங்குகள், பறவைகள், தொழில், உணவு, கலை போன்ற அனைத்தும் அடங்குவது ஆகும். உரிப்பொருள் என்பது மனித ஒழுக்கம் சார்ந்த செயல்பாடுகளை விவரிப்பதாகும்.

## திணை சார்ந்த வாழ்க்கை

நிலம் சார்ந்தே மக்களின் வாழ்க்கைச் சூழல் அமையும் என்பதை அன்றே அறிந்து உலகுக்கு உணர்த்தியவர்கள் தமிழர்கள். நிலத்தின் இயற்கை தன்மை சார்ந்தே தொழிலும் உணவும் கலைகளும் உருவாகி சிறப்படையும் என்பதை உணர்ந்து வாழ்ந்து இலக்கணம் யாத்துள்ளனர். சங்ககாலம் உணவு தேடும் வாழ்க்கை முறைகள் மாறி உணவு உற்பத்தி முறைகளில் மிகுந்த கவனம் செலுத்தப்பட்ட காலம். இதனால் உருவான நிலைத்த குடியிருப்புகளை, வாழ்வியல் நெறிகளைச், சங்கத் திணைச் சமுதாய வாழ்வு முறைகள் காட்டுகின்றன. "நால்வேறு திணைச் சமுதாயங்களிலும் நான்கு வேறு வகையான உணவு முறைகளும் உற்பத்தி முறைகளும் நிலவியுள்ளன. குறிப்பிட்ட பொருளாதார அச்சை மையமாகக் கொண்டு ஒவ்வொரு திணைச் சமுதாயமும் செயல்பட்டுள்ளது" (Mathaiyan, 2010).

## திணைவாழ்வின் வேறுபாடுகள்

சங்ககால திணைவாழ்வு பற்றி இருவேறு கருத்துகள் நிலவுகின்றன. "திணை வாழ்வு குறிஞ்சியில் தொடங்கிப் படிப்படியான பரிணாம வளர்ச்சியில் முல்லை, மருதம், நெய்தல் என ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வளர்ந்தது என்பது ஒருவகை அணுகுமுறை. இவ்வணுகுமுறை உடையோர் கருத்துப்படி மலையில் தொடங்கிய தமிழர்தம் வாழ்வு கடற்கரை வரையிலான நிலப்பகுதி நோக்கி வளர்ந்தது என்பதே முக்கியமானதாக உள்ளது. இதற்கு மறுபுறத்தே குறிஞ்சி முதலான நானில வாழ்வுகளும் ஏக காலத்தில் நிலவின. அவை தத்தம் பொருளாதார அடிப்படைக்கு ஏற்ற வளர்ச்சி நிலைகளைப் பெற்று விளங்கின. இதனால்தான் ஆற்றுப்படை இலக்கியங்கள் ஏக காலத்தில் நிலவிய நானில வாழ்க்கை நடைமுறைகளை வாழ்வியல் வேறுபாடுகளை வெளிப்படுத்துகின்றன என்பது பிறிதொரு அணுகுமுறை" (Mathaiyan, 2004). இந்த இரண்டாவது அணுகுமுறை சமச்சீரற்ற வளர்ச்சிப்போக்கு என்னும் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு சங்ககாலத் திணை வாழ்வை அவ்வத் திணைகளின் பொருளாதார அடிப்படையின் பின்னணியில் அணுகும் ஆய்வுமுறையாக உள்ளது. மலையும் மலை சார்ந்த குறிஞ்சிநிலப் பகுதிகளையும் ஆண்ட குறுநில மன்னர்களையும் முல்லைநிலப் பகுதிகளை ஆண்ட சீறூர் மன்னர்களையும் மருதநிலப் பகுதிகளை ஆண்ட முதுகுடி மன்னர்களையும் அவ்வவ் நிலப் பின்னணிகளிலேயே காட்டும் சங்க இலக்கியங்கள் வேந்தர்களையும் ஆற்றுப்படைகளால் பாடப்பட்ட வேறு பிற மன்னர்களையும் நானிலங்களின் பின்னணியில் நானிலத் தலைமை உடையவர்களாகக் காட்டுவது இங்கு முக்கியத்துவப்படுகிறது. "இந்நானிலத் தலைவர்களும் ஒருவருடன் ஒருவர் தொடர்புடையவராக வாழ்ந்தனர் என்பதும் குறிப்பிட்ட புலவர்களால் மேற்குறிப்பிட்ட நால்வகை மன்னர்களும் பாடப்பட்டிருப்பதும் திணை வாழ்வின் ஏககால இருப்பையும்

நானிலங்களும் இணைந்து அரசு உருவான சூழலையும் வெளிப்படுத்துகின்றன. எனவே சங்ககாலத் திணைவாழ்விலும் திணைக் கோட்பாடும் பொருளாதாரப் பின்புலம், அரசு உருவாக்கம் என்னும் இரண்டன் அடிப்படையிலேயும் அணுகப்பட வேண்டியனவாக உள்ளன" என்ற கூற்று நினைவுகூறத்தக்கது (Mathaiyan, 2004).

## நடுவண் ஐந்திணை

தொல்காப்பியரின் அகத்திணைக் கோட்பாடு எழுதிணைக் கோட்பாடு என்றாலும் அவ்வெழுதிணைகளில் நிலங்களை உடைய நான்கு திணைகளே முக்கியத்துவம் பெறுகின்றன. எஞ்சிய பாலை, கைக்கிளை, பெருந்திணை என்பன இந்த நானிலப் பின்னணிகளில் அவற்றோடு தொடர்புடையனவாக அவற்றை நிகழ்விடமாகக் கொண்டனவாக உள்ளன. அகத்திணையோடு இணைத்துப் பேசப்படும் புறத்திணைகளில் பாலையது புறனான வாகையும் கைக்கிளையின் புறனான பாடாண்திணையும் பெருந்திணையின் புறனான காஞ்சியும் தனித்த நிலப்பின்னணி ஏதும் இன்றி நானில வாழ்வையும் அடிப்படையாகக் கொண்டு அவற்றுக்குப் பொதுவானவையாக உள்ளன. எந்தவொரு மன்னனின் வெற்றியையும், வீரத்தையும், ஆண்மைத் திறனையும் கொடையையும் பாடுவனவாக அவை உள்ளன. எந்த மன்னனுக்கும் அறிவுரை வழங்கும் இயல்புடையதாகப் பெருந்திணையின் புறனான காஞ்சி உள்ளது. இந்த மூன்றும் பொதுத்தன்மை உடையனவாகவும் நானில வாழ்வின் அடிப்படைகளைக் கொண்டனவாகவும் உள்ளன. "பாலைபோல வாகையும் நிலம் வரைவின்றி யாண்டும் நிகழுமாதலானும் பாலைக்கு வாகை புறனாயிற்று" எனவும் "இரண்டிற்கும் நிலம் பொதுவரையறை இன்மையானும் பாடாண் கைக்கிளைக்குப் புறனாயிற்று" எனவும் இவற்றின் நிலப்பொதுமையை நாவலர் எடுத்துரைக்கின்றார் (Somasundra Bharathiyar, 1997). இவைபோன்ற நிலப்பொதுமை இன்றி நிகழும் திணைகள் குறிஞ்சி முதலான நற்றிணையில் ஆகும். இவை நிலம் என்னும் முதற்பொருளை ஆதாரமாகக் கொண்டவை என்பதே இதற்கான அடிப்படைக் காரணம். நில அடிப்படையிலான இந்நானில வாழ்வுகள் அந்நிலத்தின் நீர்வளத்தையும் நிலவளத்தையும் இயற்கையையும் அடிப்படையாகக் கொண்டவை. அவற்றின் பொருளாதார நிலைமைகளே அரசின் தோற்றத்தையும் இருப்பையும் தீர்மானித்துள்ளன

## திணை சமுதாயமும் வாழ்க்கை வேறுபாடுகளும்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு திணைச் சமுதாயங்களும் வேறுவேறு வகையான இயற்கைச் சூழல்களை மையமாகக் கொண்டு அமைந்தவை. குறிஞ்சி, முல்லை ஆகிய இரு திணைகளிலும் புன்செய் வேளாண்மையே அடிப்படை. மருதத்திலும் நெய்தலிலும் நன்செய் வேளாண்மை சிறப்பிடம் பெற்றுள்ளது இந்நானிலங்களில் நீர்வளப் பெருக்கத்தால் நன்செய் வேளாண்மையை அடிப்படைப் பொருளாதாரமாகக் கொண்ட மருதநிலம் செழிப்பு மிக்கதாகக் கவர்ச்சிநிலப் பகுதியாக அமைந்திருந்தது. அரசுக்கான நிரந்தர வருவாய் ஆதாரமாக வேளாண்மை அமைந்ததால் இந்த நிலப்பகுதிகளை மையப்படுத்தியே வேந்தர்தம் போர்கள் நிகழ்ந்துள்ளன.

நெய்தல் நிலம் கடல் வணிகப் பெருக்கத்தால் முத்து விளைச்சலால் மேம்பட்ட பொருளாதார நிலையினை உடையதாக இருந்துள்ளது. இவ்விரண்டிலிருந்தும் வேறுபட்டு மலைவளத்தையும் புன்செய் வேளாண்மையையும் அடிப்படையாகக் கொண்டிருந்த குறிஞ்சியும், புன்செய் வேளாண்மையையும் கால்நடைப் பொருளாதாரத்தையும் ஆதாரமாகக் கொண்டிருந்த முல்லையும் பொருளாதாரப் பின்னடைவு உடையனவாக இருந்துள்ளன. எனவே இந்த இருதிணைகளின் மக்கள் வேனிற்கால வெப்பத்தால் நிலம் வளம் குன்றியச் சூழலில் பொருளீட்டும் முயற்சியில் பெரிதும் ஈடுபட்டுள்ளனர். இந்தப் பொருளீட்டும் முயற்சியைப் வெகுவாகப் பாடுவனவாகவே பாலைப் பாடல்கள் அமைந்துள்ளன. பாலைப்பாடல்களின் நிலப்பின்னணிகள் குறிஞ்சியும் முல்லையுமாகவே இருப்பது இதை வெளிப்படுத்துகின்றன. "மனிதன் பண்டு கடந்து வந்த நாகரிகத்தின் படிகட்டுகள் ஐந்து. அவையாவன, வேட்டையாடுதல், நாடோடி வாழ்க்கை, கால்நடை மேய்த்தல், கடற்மேற் சேறல், தொழில் மயக்கம் கலந்த உழவுத் தொழில் மேற்கோடல், இவை முறையே குறிஞ்சி, பாலை, முல்லை,

நெய்தல், மருதத்திணைக்கு நிகராகும். ஒவ்வொரு நிலப்பிரிவையும் சார்ந்த இயற்கை வளங்கள் இயல்புகள் அவ்வந் நிலத்துக்குரிய நாகரிக வளர்ச்சிக்குத் தூண்டுதலாய் அமைந்தன" என்று கூறுகிறார் (Seenivasan, 1975).

## குறிஞ்சி நில வாழ்வு

குறிஞ்சி மலை, மலை சார்ந்த இடங்கள் ஆகும். மலை வளத்தையும் புன்செய் வேளாண்மையையும் வேட்டைத் தொழிலையும் அடிப்படையாய்க் கொண்டமைந்துள்ளன. தினையும் ஐவனவெண்ணெல்லும் புல்லரிசியும் மூங்கிலரிசியும் அவரையும் கிழங்கும் தேனும் வேட்டைப் பொருட்களும் இச்சமுதாயத்தின் அடிப்படை உணவுகள் ஆகும். உழவரால் உழுது விதைக்கப்படாதனவாகிய,

"உழவர் உழாதன நான்கு பயன் உடைத்தே

ஒன்றே சிறியிலை வெதிரி னெல்விளை யும்மே

இரண்டே தீஞ்சுளைப் பலவின் பழமூழ்க் கும்மே

மூன்றே கொழுங்கொடி வள்ளிக்கிழங்கு வீழ்க்கும்மே

நான்கே அணிநிற வோரி பாய்தலின் மீது அழிந்து

திணி நெடுங் குன்றம் தேன் சொரியும்மே"

என்னும் இயற்கை வளத்தை உடையது குறிஞ்சி என்கிறது புறநானூறு (Avvai Duraisamy pillai, 1996).

## முல்லை நில வாழ்வு

முல்லை நிலமானது கால்நடைப் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டது. பால், மோர், தயிர், தினை, வரகு, கொள், அவரை என்பன இந்நில உணவுப்பொருட்கள் என்பதை, சங்க இலக்கிய நூல்கள் வழி அறிய முடிகிறது. முல்லை நில மக்கள் முழுக்க முழுக்க கால்நடைப் பொருளாதாரத்தை மட்டுமே அல்லாமல் புன்செய் நில வேளாண்மையையும் அடிப்படையாகக் கொண்டிருந்ததை,

"கருங்கால் வரகே இருங்கதிர்த் தினையே

சிறுகொடிக் கொள்ளே பொறிகிள ரவரையொ

டிந்நான் கல்லது உணாவு மில்லை"

என்னும் பாடல் காட்டுகிறது (Avvai Duraisamy pillai, 1996).

## மருத நில வாழ்வு

குறிஞ்சி, முல்லையின் வாழ்க்கை முறையிலிருந்து மருதமும் நெய்தலும் வேறுபட்டுப் பொருளாதார மேம்பாடு உடையனவாய் இருந்துள்ளன. உணவு உற்பத்திக்கான அடிப்படை ஆதாரமாய் மருதநிலம் விளங்கியுள்ளது. இதை ஆற்றுப்படை நூல்களும் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகியவையும் காட்டுகின்றன. பெரும்பாணாற்றுப்படையில் நாற்றுநடுதல், நெல்விளைதல், கடாவிடுதல், கரும்பாலை, மக்களின் உறைவிடங்கள் ஆகியன பேசப்பட்டுள்ளன.

"குடகாற் றெறிந்த குப்பை வடபாற்

செம்பொன் மலையிற் சிறப்பத் தோன்றுந்

தண்பணை தழீஇய தளரா விருக்கை"

என வயல் வளமும்,

"ஏணி யெய்தா நீணெடு மார்பின்
முகடுதுமித் தடுக்கிய பழம்கால் லுணவிற்
குமரி மூத்த கூடோங்கு நல்லில்"
என வேளாளர் இல்ல வளமும்,
"கோடை நீடினுங் குறைபட லறியாத்
தோடாழ் குளத்த கோடுகாத் திருக்குங்
கொடுமுடி வலைஞர் குடி"

எனக் குளத்தின் வளமும் பாடப்பட்டுள்ளது. மழைவளமும், மழைநீரால் குளம் நிறைந்த சிறப்பும், குளநீரால் வயல் செறிந்த வளமும் பாடப்பட்டுள்ளன (Somasundranaar, 1966).

"தொல்பசி அறியாத் துளங்கா இருக்கை
மல்லற் பேரூர்"

எனப் பசி அறியப்படாத ஊராய் மருத ஊர் காட்டப்பட்டுள்ளது. செந்நெல் வெண்ணெல் உணவு இம்மக்களின் அடிப்படை உணவாய் உள்ளது. வாளைமீன், வரால், நண்டு, வெண்சோறு என்னும் இவையும் உழவர் சமுதாய உணவுகளாய்க் காட்டப்பட்டுள்ளன (Somasundranaar, 1966).

## நெய்தல் நில வாழ்வு

நெய்தல் நிலத்தின் உணவுகளாகப் பல்வேறு வகையான மீனும் நண்டும் இருக்கின்றன.

"வாலுளைப் புரவியோடு வடவளந் தருஉ
நாவாய் சூழ்ந்த நளிநீர்ப் படப்பை
மாட மோங்கிய மணன்மலி மறுகிற்
பரதர் மலிந்த பல்வேறு தெருவிற்
சிலதர் காக்குஞ் சேணுயர் வரைப்பி
னெல்லுமு பகட்டொடு கறவை துன்னா
மேழகத் தகரோ டெகினங் கொட்குங்
கூழுடை நல்லில்"

எனக் குதிரையும் வடப்புலப் பொருட்களும் கொண்ட நாவாய்களையும், தொழில் செய்வோரால் காக்கப்படும் பண்டகசாலைகளையும், பரதவர் மிக்க மாடங்கள் உயர்ந்த தெருக்களையும் நெல் விளைதற்குக் காரணமாக எருதுகளுடன் ஆடுகளும் நாய்களும் உள்ள சோற்று வளம் மிக்க நல்ல இல்லங்களையும் உடையதாய் நெய்தல் நிலம் காட்டப்பட்டுள்ளது. நெல்லோடு தோப்புக்குடிகளின் உணவாக இளநீர், பலா, வாழை, நுங்கு, சேப்பங்கிழங்கு ஆகியன கூறப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது (Somasundranaar, 1966).

## பொருளாதார சார்பு நிலை

சங்ககாலத் திணை அவ்வத் திணைகளின் பொருளாதார அடிப்படையின் பின்னணியில் அணுகுவது சிறப்பாகும். "நால்வேறு நிலங்களும் நால்வகை வாழ்க்கை முறைகள் இருந்ததைக் குறிப்பிடுகின்றன. இந்த வேறுபட்ட வாழ்வியல் முறைகள் வேறுபட்ட பொருளாதாரச் சார்பை அடிப்படையாகக் கொண்டவை என்பது வெளிப்படை. இந்த வேறுபட்ட வாழ்வைக் காட்டும் திணைச் சமுதாயங்களைச் சமசீரற்ற வளர்ச்சிப் போக்குகளாகும்" என்று சிவத்தம்பி கூறுகிறார் (Sivathambi, 1988).

உற்பத்தி சக்திகளின் மீது மனிதன் ஆதிக்கம் பெறுவதுதான் மனிதகுல முன்னேற்றத்தின் ஊற்றுக்கண்களாகும். "இயற்கை நிலைமைகள் வரலாற்றுக் கட்டங்கள் இவற்றில் அமைந்துள்ள வேறுபாடுகள் பல்வேறு மக்களின் வளர்ச்சியிலும் பல்வேறு வர்க்கங்கள் சமூக நிறுவனங்கள் பண்பாட்டுத்துறைகள் ஆகியவற்றின் வளர்ச்சி வேகத்திலும் வேறுபாடுகளை ஏற்படுத்துகின்றன. இதனால் வரலாறு முன்னேறுகிறபொழுது சமுதாயத்தின் ஓர் பகுதி அல்லது மற்றோர் பகுதியில் வேகமாகவோ மெதுவாகவோ முன்னேற்றம் ஏற்படும்" (Sivathambi, 1988). என்னும் மார்க்ஸ் எங்கெல்ஸ் கருத்தை எடுத்துக்காட்டி அதைச் சங்க திணைப் பாகுபாட்டுடன் பொருத்தி ஆராய்ந்துள்ளார். கா. சிவதம்பி. இன்றைய சமுதாயச் சூழலிலும் இந்தச் சமச்சீரற்ற வளர்ச்சி போக்கே நிலவுவதை நாம் அறியலாம். நீர்நில வளமும் உற்பத்திசக்தி, உற்பத்தி முறைகள் என்பனவற்றிற்கு ஏற்ப வாழ்க்கைத் தரமும் வேறுபட்டிருப்பதை அறியலாம்.

## பண்டமாற்று பொருளாதார நிலை

நால்வகை நிலங்களும் தனித்தனித் தீவுகளாக அமைந்து விடவில்லை. இந்த நால்வகை நிலங்களின் உணவு உற்பத்திப் பொருட்கள் நால்வேறு நிலப்பகுதிகளிலும் பரவப் பண்டமாற்று பேரளவில் உதவியுள்ளது. அரசு உருவாக்கம் நிகழ்ந்த சங்ககாலப் பகுதிகளில் நால்வேறு நிலப்பகுதிகளும் அரசில் இணைக்கப்பட்டதை ஆற்றுப்படை நூல்கள் காட்டுகின்றன. பொருநராற்றுப்படையில்,

"தேனெய்யொடு கிழங்குமாறியோர்
மீனெய்யொடு நறவு மறுகவுந்
தீங்கரும்போ டவல் வகுத்தோர்
மான்குறையொடு மதுமறுகவுங்
குறிஞ்சி பரதவர் பாட நெய்த
னறும்பூங் கண்ணி குறவர் சூடக்
கானவர் மருதம் பாட வகவர்
நீனிற முல்லைப் பஃறிணை நுவலக்
கானக்கோழி கதிர்குத்த
மனைக்கோழி தினைக் கவர
வரைமந்தி கழிமூழ்கக்
கழிநாரை வரையிறுப்பத்
தண்வைப்பினா னாடுகுழீஇ
மண்மருங்கினான் மறுவின்றி
யொருகுடையா னொன்றுகூறப்
பெரிதாண்ட பெருங்கேண்மை"

என நில மயக்கம் பாடப்பட்டுள்ளது (Somasundranaar, 1966). இதைப் போல் நானிலமும் அரசில் இணைந்த நிலையைப் பொய்கையாரும் சேரமான் கோக்கோதை மார்பனை நாடன், ஊரன், சேர்ப்பன் என்று எவ்வாறு அழைப்பது எனப் பாடியதன் வழி காட்டியுள்ளார்.

"புனவர் தட்டை புடைப்பி னயல
திறங்குகதி ரலமரு கழனியும்

பிறங்குநீர்ச் சேர்ப்பினும் புள்ளொருங் கெழுமே"

என மருதமும் நெய்தலும் இணைந்த நிலையைப் புகழ்ந்துள்ளார் (Somasundranaar, 1966). இந்நிலையில் பண்டமாற்று நால்வகை நிலங்களிலும் எளிதாக நிகழ்ந்துள்ளது.

"உமணர் தந்த உப்புநொடை நெல்" (Narayanasamy, 1952)

"வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி

நெல்லொடு வந்த பல்வாய்ப் பஃறி" (Somasundranaar, 1956)

"உப்புநொடை நெல்லின் மூரல் வெண் சோறு"

"பசுமீன் நொடுத்த வெண்நெல் மாஅ"

"நெல்லின் நேரே வெண்கல் உப்பு"

"நெல்லும் உப்பும் நேரே" (Somasundranaar, 1970)

"மீன்நொடுத்து நெல் குவைஇ"

என்பன உப்பிற்கும் மீனிற்கும் நெல் பண்டமாற்றானதைக் காட்டுகின்றன (Somasundranaar, 1966). உப்புக்கு வெண்ணெல் பண்டமாற்றாய்ப் பெறப்பட்டது. தேன், கிழங்கு இவற்றுக்கு மீனும் நெய்யும் கள்ளும் பெற்றதையும், கரும்பு, அவல் இரண்டிற்கும் மான் தசையுடன் கள் பெற்றதையும், மான் தசைக்கும் தயிருக்கும் வெண்ணெல் பெற்றதையும் வரால்மீனுக்கு வெண்ணெல் மாற்றானதையும் சங்கப்பாடல்கள் காட்டுகின்றன.

## நானிலத் தலைமை வேறுபாடுகள்

வேறுபட்ட தன்மையுடைய நான்கு நிலங்களிலும் ஆட்சி முறைகளும் அரசு முறைகளும் மாறுபட்ட நிலையிலேயே இருந்துள்ளன. "சங்ககாலம் நிலவுடைமையாக மாறிய காலக்கட்டம் என்பதால் பழஞ்சமுதாய எச்சமாக இனக்குழுச் சமுதாய வாழ்வு முறைகளும் நிலவியுள்ளன" என்று கூறுகிறார் (Subramaniyan, 2011). இவ்வாறு இனக்குழு சமுதாயம் நிலவுடைமைச் சமுதாயமாக வளர்ந்து வரும் நிலையில் நானிலத்தின் தலைமைகளிலும் வேறுபாடுகள் இருந்துள்ளன. முல்லை நிலப்பகுதிகளை சீறூர் மன்னரும் குறிஞ்சி நிலப்பகுதிகளைக் குறுநிலமன்னரும் மருதநிலப் பகுதிகளை முதுகுடி மன்னர்களும் ஆண்டுள்ளனர். நெய்தல் நிலப் பகுதிகளிலும் மருதநிலப் பகுதிகளிலும் தம் செல்வாக்கை நிலைநாட்டிப் பின்னர் வேந்தராக உயருகின்றனர்.

மருதநிலத் தலைமக்களும் வேளாண் பண்பாட்டுத் தலைவர்களுமான பெருமன்னர்கள் வேந்தர் எனப்பட்டனர். வேந்தர்கள் மருதநிலப் பகுதிகளையும் நெய்தல் நிலப் பகுதிகளையும் மையமிட்டுத் தலைநகரங்களை அமைத்துக் கொண்டனர். அதன் மூலம் வேளாண் பொருளாதாரத்தாலும் வணிகப் பொருளாதாரத்தாலும் உயர்ந்ததைப் பட்டினப்பாலை, மதுரைக்காஞ்சி, பொருநராற்றுப்படை போன்றவையும் புறநானூற்றுப் பாடல்களும் காட்டுகின்றன.

## ஆய்வுப் பயன்கள்

தமிழின் முதல் இலக்கியமும் முதன்மை இலக்கியமுமான சங்க இலக்கியம் சங்கச் சமுதாய அரசியல், பொருளாதாரம், வரலாறு, பண்பாடு ஆகியவற்றின் ஆவணமாக இருந்து சங்கச்சமுதாயத்தை ஓரளவு நம் கண்முன் நிறுத்துகின்றன. சங்க இலக்கியத்தின் வழியாக வெளிப்படும் குடும்பம் என்னும் அடிப்படைக் கூறின் பல்வேறுபட்ட திணைசார் பரிமாணங்களை, வளர்ச்சிப் போக்குகளை, அரசியல் சார்புகளை, குடும்பங்களின் நிலைகளைக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆராய்வது சிறப்பாகும். தமிழ் இலக்கியங்களையும் காப்பியங்களையும் பல்வேறு வகைப்பட்ட புதிய கோட்பாடுகளின் அமைப்பிற்குட்பட்டு ஆராயலாம்.

## முடிவுரை

சங்ககாலம் நான்கு வகையான ஒழுக்க வடிவங்களைக் கொண்ட நான்கு வகையான இயற்கைப் பின்னணிகளில் அமைந்த வாழ்வியல் நெறிகளைக் கொண்டது. நான்கு வகைப்பட்ட திணைநிலைச் சமுதாயங்களிலும் வேறுபட்ட வாழ்க்கை நடைமுறைகளைக் கொண்டதாக அமைந்துள்ளன. மலைப்பகுதி, காட்டுப்பகுதி, வயற்பகுதி, கடற்பகுதி என்னும் நானிலங்களை ஆதாரமாகக் கொண்டு வாழ்ந்த நான்குவகைக் குழுக்களும் அவற்றின் தனித்தன்மைகளும் இணைவும் பற்றியதாக இவ்வாய்வு அமைந்துள்ளன. சங்கச் சமுதாயம் உணவு உற்பத்தி சமுதாயமாக, உடைமைச் சமுதாயமாக மாறிய சூழலில் நிலமே அவற்றின் அடிப்படை ஆதாரமாக இருந்துள்ளது. இந்நிலையில் நிலத்தை மையப்படுத்தியே சமுதாய வாழ்வியல் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

## References


Avvai Duraisamy pillai, S. (1996) Purananooru Moolam Uraiyum, Poompuhar Pathippagam, Chennai, India.

Mathaiyan, P. (2004) Sanga Ilakkiyathil Velan Samutahiyam, New Century Book House, Chennai, India.

Mathaiyan, P. (2010) Sanga Ilakkiyathil Kudumbam, New Century Book House, Chennai, India.

Narayanasamy Iyer, A. (1952) Natrinai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Seenivasan, R. (1975) Tamil Varalaru, Jeyekumari Stores, Nagar Koil, Tamil Nadu, India.

Sivathambi, K. (1988) Thinaik kotpaduklaum, New Century Book House, Chennai, India.

Somasundra Bharathiyar, (1997) Tholkappiyar Porutpadalap paththurai, Vasumathi Pathippagam, Chennai, India.

Somasundranaar, P.V. (1956) Patinapalai (Kalitruyaanai Nirai), Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Somasundranaar, P.V. (1966) Perupaanatruppadai, Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Somasundranaar, P.V. (1970) Aganaanooru (Kalitruyaanai Nirai), Tirunelveli Thennindia Saiva Sithantha Noorpathippu Kazhagam, Tirunelveli, India.

Subbu Reddyar, N. (1998) Agathinai kotpadukal, Sarvodhaya Illakkiya Pannai, Madurai, India.

Subramaniyan, G. (2011) Sangakala Samuthayam, New Century Book House, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.


**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License